# மினு மசானி



சிறு வெளியீடு  ஆகஸ்ட் 2023            ஆர்.பட்டாபிராமன்

# மினு மசானி

மினு மசானி இந்திய அரசியல் மறந்து போன பெயர்களில் ஒன்று. இந்தியன் லிபரல் குரூப் சார்ந்தவர் என அறியப்பட்டவர். அவரின் வாழ்க்கைப் பயணத்தில் பல நிறுத்தங்கள் இருந்தன.

விடுதலைப் போராட்டம், காந்தியுடன், சோசலிஸ்ட்களுடன், சுதந்திரா ராஜாஜியுடன் , நாடாளுமன்றம், கமிட்டிகள் என அரசியல் சுற்று போகியிருக்கலாம். புகழ் வாய்ந்த எழுத்தாளர், தேர்ந்த அறிவுஜீவி என்கிற பக்கங்களும் உண்டு. அவரின் குழந்தைகளுக்கான எழுத்துக்களில் our India இலட்சக்கணக்கில் விற்றுத் தீர்ந்தது. இப்போதும் இணையத்தில் கிடைக்கக்கூடிய புத்தகமது.

மினு மசானி யார்? காந்தியரா- சோசலிஸ்ட்டா- கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளரா- வலதுசாரியா- சுதந்திரா லிபரலா ..அவ்வப்போது இவைகளில் ஒன்றாகவும், சில நேரங்களில் இவைகளின் கலவையாகவும் இருந்தவர் மினு மசானி.

நேருவின் உள்வட்டத்தில் சில காலம் ஜேபி, அச்சுத் பட்வர்தன், மினு மசானி மூவரும் இருந்தனர். இந்த மூவரும் அப்போது ஒன்றாக விவாதித்து, வேறுபட்டு, நட்புடன் பயணித்தனர். ஜேபியுடன் பல மோதல்கள் வேறுபாடுகள் இருந்தாலும், எந்த புதிய புத்தகத்தையும் ஜேபிக்கு அனுப்பக்கூடியவராக மசானி இருந்தார்.

ராஜாஜியுடன் என்றால் அங்கும் ராஜாஜியும் சரி, மசானியும் சரி மனதில் நினைத்ததை ஒளிவு மறைவின்றி தெரிவிப்பவர்களாக இருந்தனர். மசானியுடம் ஒரு முறை கேள்வி ஒன்று வைக்கப்பட்டது. அறிவுஜீவியான உங்களுக்கு அமைப்பு அவசியமா? மசானி பதில் சொன்னார். ஆமாம் even truth needs wings. இது அவரின் பாப்புலர் மேற்கோளானதாம்.

மசானி நேர ஒழுங்கு, சுய ஒழுங்கு நிறைந்தவர். எவருக்காவது அவர் ‘ அப்பாயிண்ட்மெண்ட்’ கொடுத்து அந்த மனிதர் 10 நிமிடம் தாமதமாக வந்தால் கூட எரிந்து விழுவார். நான் வேறு வேலையாவது பார்த்திருப்பேன் என்ற கோபம் அவரிடம் வெளிப்படும்.

கூட்டம் என்றால் அறிவிக்கப்பட்ட நேரத்திற்கு 5 நிமிடம் முன்பாகவாவது கண்டிப்பாக மசானி அரங்கிற்கு வந்துவிடுவார். 30 நிமிடம் அதிகபட்சம் தாங்குவார். பின்னரும் தொடங்கவில்லையெனில் கடிக்க ஆரம்பித்துவிடுவார். கூட்டமே ஒழுங்கா நடத்த முடியாத நாம் என்ன செய்யப்போகிறோம் என்ற சினம் வெளிப்படும்.

கூட்டத்திற்கு தலைமை என்றால் , அவ்வளவுதான். பேசுகிறவர்களின் நேர ஒழுங்கில் கறாராக இருந்து அதிருப்திக்கு உள்ளாவார். அர்த்தமுள்ள பேச்சு, அளவான நேரத்தில் சாத்தியம் என நினைத்த தலைமுறை அவர்.

நேரு ஒருமுறை அவர் தோழமை வட்டத்தில் இருந்தபோது அய் நா மைனாரிட்டி கமிட்டி ஒன்றிற்கு இந்தியப் பிரதிநிதியாக மசானியை அனுப்பியிருந்தார். அங்கு வந்த சோவியத் பிரதிநிதியுடன் மசானி நேரிடையாக மோதினார். நீங்கள் மைனாரிட்டியை நடத்தும் லட்சணம் எனக்குத் தெரியும் என தாக்கிப் பேசினார். நேருவிற்கு சங்கடம் நேரும், தோழமைக்கூட பாதிக்கப்படலாம் எனத் தெரிந்தும் மசானி தனக்கு கிடைக்கும் தகவல்கள் படியே பேசினார். அந்த கமிட்டியில் மசானி தொடரமுடியாமல் போனது.

மசானி அரசியல் ஆய்வுகளில் கவனம் செலுத்தியவர். 1950 களில் Democratic Research Service , 1951 Indian Committee for Cultural Freedom போன்றவைகளை நிறுவி, சோவியத் எதிர்ப்பு, இந்திய கம்யூனிஸ்ட்கள் மீதான விமர்சனங்களை அவர் தீவிரப்படுத்துபவராக இருந்தார். கம்யூனிஸ்ட்கள் காங்கிரஸ் சோசலிஸ்ட்களுடன் சேர்ந்து வேலை செய்ய முடியாமையை மசானி எழுத்துக்கள் உருவாக்கின. ஜேபி - ஜோஷி இருவரின் முயற்சியும் பயனளிக்காது போகும் வண்ணம், மசானி தனது ஏராள ஆதாரங்கள் மூலம் ஜேபி கம்யூனிஸ்ட்களை வெளியேற்ற காரணமானார்.

சுதந்திரா அமர்வு ஒன்றில் மசானி, கே எம். முன்ஷி மோதிக்கொண்டனர். முன்ஷி நொந்து walk out செய்தார். எவ்வித egoம் கொள்ளாமல், மசானி முன்ஷியை சமாதானப்படுத்தி உள்ளே அழைத்து வந்தார். தனது மோதலால் தங்கள் உடல்நிலை பாதித்துவிடக் கூடாது என்ற தன் அன்பையும்

முன்ஷியிடம் அவர் வெளிப்படுத்தினார். மசானியின் ஆதாரங்களுடன் கூடிய தாக்குதலால் அவர் பலர் நட்பை இழக்க வேண்டியும் இருந்ததாம்.

ஜே ஆர் டி டாடா மசானி குறித்து பதிவொன்றில் இப்படி எழுதியிருந்தார். மசானி குறித்த பொருத்தமான பார்வை.

Until Minoo Masani joined Tatas in 1941, I knew him only by name and reputation as a young controversial socialist politician who, starting as a militant advocate of Marxism, had gradually turned into an equally militant opponent, while claiming throughout to be a firm Gandhian and democratic.

This baffled or infuriated many, including his political comrades and peers of various parties and hues, who not unnaturally, considered him either as a dangerous revolutionary or a turncoat or opportunist whose debating brilliance, integrity and organising talents were, however never doubted

.. Minoo was one of the few I continued to admire and respect despite my disagreement with most of his political credo…I became increasingly surprised that a man of his intelligence, character and un compromising integrity had been denied inclusion in the top leadership of the country

…We found no difficulty , however in agreeing on two matters..industrialists to adhere to their social responsibilities as trustees..the other, in regard to the need to develop a real partnership based on mutual trust, between management and labour.

திரு டாட்டா அவர்கள் மசானி குறித்து எழுதியது சரியான சித்தரிப்பாகவே எனக்குப்பட்டது. மினு மசானி எழுத்துக்கள் சில இணையத்தில் கிடைக்கின்றன. அவரின் கம்யூனிஸ்ட்கள் குறித்த விமர்சன புத்தகம் கூட இணையத்தில் படித்ததாகத்தான் நினைவு.

மசானி குறித்த சிறிய புத்தகம் ஒன்றை லிபரல் குழுவில் தொண்டாற்றிய எஸ் வி ராஜூ எழுதியுள்ளார். என் பி டி செல்வோர் வாங்கி படிக்க முடியும். ரூ 40 என போட்டிருந்தார்கள்

1933ல் பம்பாய் மாநில காங்கிரஸ் தலைவராக மசானி சௌபாத்தியில் நடத்திய தடையை மீறிய கூட்டத்திற்காக சிறைத்தண்டனைப் பெற்றார். இதற்கு முன்னரும் அவர் சிறை சென்றவர்தான். 1933 சிறைவாசத்தில் ஏராள நண்பர்கள் கிடைத்தனர்.

நாசிக் மத்திய சிறையில் மசானிக்கு கண்கொள்ளா காட்சி. ஆகா அறிவார்ந்த விவாதம், தேர்ந்த உரையாடலுக்கான இடமானது சிறைக்கூடம். காந்தியர்கள் பெரும் பட்டாளம் அங்கேயிருந்தனர். பி ஜி கேர், சந்துலால், புலாபாய் தேசாய், மஷ்ருவாலா, சங்கர ராவ், குமரப்பா சகோதரர்கள், என் வி காட்கில், மொரார்ஜி என பெரும் டீம். விவாதம், உடற்பயிற்சி என வேதனை மனதில் படராமல் நாட்களை இவர்கள் நகர்த்தினர். ஏராள சோசலிச சார்பு கொண்ட இளம் தோழர்களும் இருந்தனர்.

அம்மா 'ஜெயிலில் 100 புத்தகம் படிச்சுட்டேம்மா' என மசானி வீட்டிற்கு கடிதம் போட்டார். எவ்வளவு தாகம் ..தேடல் தவிப்பு.

மசானியுடன் கூடப்பிறந்தவர்கள் கேகி, மேரா, பெசி. அனைவரும் கல்வியில், பொறுப்பில் உயர்நிலையடைந்தனர். அம்மா மனிஜே, அப்பா ரஸ்தம் மசானி. மினுவிற்கு வகுப்புத்தோழன் யூசுப் மெஹ்ரலி. யூசுப் பின்னர் அற்புதமான சோசலிஸ்ட் தலைவராக உயர்ந்தவர். புகழ் வாய்ந்த எல்பின்ஸ்டன் கல்லூரியிலிருந்து மினு 1925ல் லண்டன் செல்கிறார். லண்டன் ஸ்கூல் ஆப் எகானமிக்ஸில் LLB சட்டப் படிப்பை முடித்தார்.

லண்டனுக்கு சென்ற பெரும்பாலான மாணவர்கள் அப்போது லேபர் கட்சியிலோ, கம்யூனிஸ்ட் கட்சியிலோ, ஹரால்ட் லாஸ்கியிடமோ செல்லாமல் இருக்கமாட்டார்கள். மசானிக்கு லேபர் பார்ட்டி அதன் தலைவர்கள் தொடர்பு ஏற்பட்டது. மார்க்சியம், சோசலிசம் உள் போகத்துவங்கியது . மாணவர் மன்ற தேர்தலில் 'லேபர்' சார்பாக மசானி

நிறுத்தப்பட்டார். மசானிக்கு முன்னரே அங்கு அறிமுகமாகியிருந்த வி கே கிருஷ்ண மேனன் போட்டியிட்டார். இருவரும் தோல்வியடைந்து கன்சர்வேடிவ் சார்பாக போட்டியிட்ட மாணவர் வென்றார்.

1927 சோவியத் அக்டோபர் புரட்சியின் 10 ஆண்டுகள் கொண்டாட்டம் சிறப்பாக மாஸ்கோவில் நடந்தது. மோதிலாலும், ஜவஹரும் அழைக்கப்பட்டு சென்றிருந்தனர். லண்டனிலிருந்து 'தொழிலாளரின் தந்தையகம் நோக்கி' எனச் சென்ற குழுவில் மசானியும் இருந்தார். நேருவை அங்குதான் சந்திக்கிறார்.

லண்டன் சட்டக்கல்வி முடிந்து இந்தியா திரும்பிய மசானி பம்பாயில் பாரிஸ்டர் பணியைத் தொடங்குகிறார். விடுதலை போராட்டக்காரர்களுடன் இருப்பதை யூசுப் பெருமிதமாகச் சொல்லச்சொல்ல, அப்புறம் எங்கு மசானி சட்டத்தொழில் பார்ப்பது? கூட்டம் கைது என்கிற வாழ்க்கை பழகியது.

1933ல் சிறைத்தண்டனைப் பெற்ற மசானியை பார் கவுன்சிலிருந்து நீக்கவேண்டும் என்கிற பிரச்சனை எழுந்தது. வழக்கு பிரைவி கவுன்சில் வரை சென்றது. யாரை வைத்து வாதாடலாம் என நினைத்தபோது, லண்டனில் ஜின்னா இருக்கிறார், கேட்டுப்பார்க்கலாம் என நினைத்தனர். எம் சி சாக்ளா அப்போது பார் அசோசியேஷன் செயலர். பின்னர் அவர் chief Justice, Law Minister என உயர்ந்தவர். சாக்ளாதான் ஜின்னாவிற்கு வழக்காடமுடியுமா எனக் கேட்டார். ஜின்னாவோ தனது நிலைப்பாட்டை தெரிவித்தார். அதாவது the principle of never appearing without charging fee. பீஸ் இல்லாமல் எப்படிப்பா என ஜின்னா கைவிரித்த நிலையில், உதவிக்கு காந்தியின் தோழரான எச் எஸ் எல் போலக் வந்தார். டி என் பிரிட் என்பார் பீஸ் இல்லாமல் வாதாடினார். மசானிக்கு சாதகமாக வந்த பம்பாய் கோர்ட் தீர்ப்பிற்கு பாதகமில்லாமல் பிரைவி கவுன்சிலும் பேசியது.

1942ல் குவிட் இந்தியா போராட்டத்தின்போது லோகியா, ஜேபி, பட்வர்தன் போன்ற உற்ற நண்பர்களுடன் மசானி சிறையேகினார். சிறையில் Ninth August என்கிற பத்திரிகையை மசானி நடத்தினார்.

முன்னர் இருந்த நாசிக் சிறைவாசத்தில் தான் ஜேபி தோழர்கள் காங்கிரஸ் சோசலிஸ்ட் பார்ட்டி குறித்து சிந்தித்தனர்.அவ்வட்டத்தில் மசானியும் ஒருவர்

மசானி தன் தோழர்களுடன் 1933ஆம் ஆண்டின் நாசிக் சிறை விவாத அடிப்படையில் காங்கிரசிற்குள் சோசலிஸ்ட் கட்சி அமைப்பதை ஏற்றார். நேருவிற்குதான் மசானி கடிதம் எழுதினார். சிறையிலிருந்து வெளியே வந்தவுடன், அலகாபாத் சென்றார். நேருவின் அன்பில் திளைத்தார். சோசலிஸ்ட்களுக்கு ஊக்கம் தந்து வழிகாட்ட நேருவிடம் வேண்டினார்.

மசானி 1927ல் சோவியத் புரட்சியின் 10 ஆண்டுகள் கொண்டாட்டத்திற்குப் போனார். கிரிப்ஸ் தூதுக்குழு என நம் நாட்டு குழந்தைகள் கூடச் சொல்லும். அந்த ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ் லேபர் கட்சியை சார்ந்தவர். இடது சிந்தனை கொண்டவர். மசானியை 1935 சோசலிஸ்ட் லீக் சர்வதேச கூட்டத்திற்கு கிரிப்ஸ் அழைத்தார். இந்திய நிலைமைகள் குறித்து மசானி லண்டனில் பேசவேண்டும் என கிரிப்ஸ் நினைத்தார்.

ஜேபியும் மசானியை லண்டன் போய் வா, கூடவே கண்டிப்பாக 'மாஸ்கோ செல்' என அன்புக்கட்டளைப் போட்டார். மசானிக்கு தயக்கம் இருந்தது. இந்திய நிலைமைகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைவிட, சோசலிஸ்ட்கள்தான் சரியாக புரிந்தவர்கள், எனவே CPI விடுத்து CSPக்கு மாஸ்கோ அங்கீகாரம் தருவது நல்லது என்பது ஜேபியின் விழைவு. மசானியும் சோவியத் தலைவர்களை சந்தித்து தங்கள் கட்சிக்கு ஆதரவைக் கோரினார். மாஸ்கோ தலைவர்கள் மசானி பேசியதைக் காதுகொடுத்து கேட்டுக்கொண்டனர். எந்த உறுதிமொழியையும் அளிக்கவில்லை. ஆனால் Anti imperialist National Broad Front என்பதை நோக்கி அவர்கள் சற்று நகர்ந்தனர்.

மாஸ்கோவிலிருந்து 1935 ல் சோவியத் சாதனைகள் என்கிற பெருமிதத்துடனேயே மசானி இந்தியா திரும்பினார். ஆனாலும், அவர் அறிந்த சில விஷயங்களை மறைக்காமல் எழுத விரும்பினார். நேருவின் முன்னுரையை வாங்கி தனது Soviet Sidelights என்கிற வெளியீட்டைக் கொணர்ந்தார்.

அவர் சோவியத் முன்னேற்றங்களை பேசிவிட்டு, அங்கு அசமத்துவம் மட்டுமல்ல வறுமையும் நிலவுகிறதென்றார். கமிசார்களும் (அமைச்சர்கள்)

அவர்களது துணைவிமார்களும் பெரும் ஆடம்பரத்தில் இருப்பதை பார்க்கமுடிந்தது என்றார். அவர்களின் ஆடம்பர வீடுகளுக்கு அருகாமையிலேயே, மிகச் சாதாரண உழைப்பாளர்களின் வறுமை சூழல் வீடுகள் இருந்தன. பாக்டரி தொழிலாளர்க்கு 200 ரூபிள் மாத ஊதியம்மென்றால், கம்பெனி மானேஜர், எழுத்தாளர், நடிகர்கள் 5000 ரூபிள்பெற்றனர். ரயில் பயணங்களில் கட்டைவண்டி மற்றும் சொகுசு பயண வேறுபாடுகளையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மசானி இங்கிருந்த கம்யூனிஸ்ட் மற்றும் சோசலிச தலைவர்களுடன் வேறுபாடு கொண்டார். டாட்டா கம்பெனியில் தொழில் உறவு அதிகாரி, எக்சிக்யுடிவ் அதிகாரியாக 16 ஆண்டுகள் பணிபுரிந்தார். Corporate Social Responsibility, workers participation in the management போன்றவற்றை 1944 லேயே டாட்டாவுடன் மசானி சோதித்து வெற்றியும் கண்டார். 1945 ல் படேல் அறிவுறுத்தலில் காங்கிரஸ் சார்பாக மத்திய சட்டமன்றம் சென்று தன் விவாதத் திறனால் பலரையும் வியக்க வைத்தார்.

மசானிக்கு காந்திஜியுடன் நல்ல அனுபவம் ஏற்பட்டது. காந்திதான் 1934 ல் மசானியை அழைத்தார். மே மாதம் ஒரிஸ்ஸாவிற்கு வந்துவிடு. 10 நாட்கள் காலை, மாலை நடைப்பயிற்சியில் தினம் 2 மணிநேரம் விவாதிக்கலாம். 20 மணிநேரத்தில் என்னை மாற்று என அழைக்கிறார். இளம் மசானியும் நம்பிக்கையுடன் செல்கிறார். My purpose in accepting the invitation, frankly, was to explain to him why we were right and he was wrong என்று மசானி நினைவு பேசியது.

ஒரு பக்கம் அகதா ஹாரிஸன், மற்றொரு பக்கம் மசானியுடன் காலை 5 மணிக்கே காந்தி நடக்க ஆரம்பிப்பர். மசானியும் காந்தியும் குஜராத்தியில் பேசினால், அகதா ஆங்கிலத்தில் பேசுங்கள் என்பார். உங்களுக்கு பிறகு சொல்கிறேன் என்பார் காந்தி. காந்திக்கு சோசலிச சொல்லாடல்கள் புரியவில்லை. அவர் தர்மகர்த்தாமுறை என்கிறார் என்ற புரிதலுடன் தான் மசானி வெளிவந்தார். ஆண்டுகள் கூடக் கூட காந்திதான் சரியாக சொல்லிக்கொண்டிருந்தார், நாங்கள் கனவுலகில் இருந்தோம் என்கிற புரிதல் மசானிக்கு ஏற்பட்டது.

1950 ல் யூகோஸ்லேவியா சென்றபோது, சோவியத் தேசியமயத்திற்கு மாற்றான 'ஒர்க்கர்ஸ் கவுன்சில்' சோதனைகளை அங்கு கம்யூனிஸ்ட்கள் செய்ததை அவர் கண்டார். அந்த தலைவர்களிடம் மசானி 1934 லேயே காந்தி இதைத்தான் எங்களிடம் சொல்லிவந்தார். நீங்கள் அமுலாக்கி வருகிறீர்கள் என வியந்து பாராட்டினார்.

1947 ல் கம்யூனிஸ்ட்கள் குறித்து கருத்துகள் தேவையெனில் பியரிலால் மசானியை அழைத்துதான் காந்தியிடம் பேசவைத்தாராம். மசானி எழுதிய 'Socialism Reconsidered' என்பதும் காந்தியின் பார்வைக்குப் போனது. காந்தியிடமிருந்து ஒருவர் இந்த 5 அம்சங்களை சரியாக கற்றுக்கொள்ளவேண்டும் என மசானி எழுதினார்.

"மனிதனையும் அவன் செயல்களையும் வேறுபடுத்தி புரிந்துகொள். அவன் செயலில் வேறுபட்டால் அந்த தனிமனிதனை தாக்காதே. செயல் மீது வினை செய்.

வழிகள் முடிவுகளை போல மிக முக்கியமானவை. மோசமான வழிகளால் சரியான முடிவுகள் வருவதில்லை நீடிப்பதில்லை

அரசு அரசு என தலைமீது தூக்கிவைத்து கொண்டாடாதே. ஆக அதிகாரம் கொண்டதை விட, அரசியல் பொருளாதார அதிகார பரவல் தான் நல்ல வழி.

வழக்கொழிந்த doctrine line of action எனப் பிடித்துக்கொண்டு தொங்காதே. இதில் consistency என்கிற கழுதை குணம் வேண்டாம்

எப்போதும் உள் முகம் காண் Turn searchlight inwards என்பதை கடைப்பிடி"

மசானி அவரின் நினைவுகளான Bliss was it that Dawnல் எழுதினாராம்

" It was an Indian hand that killed Gandhiji. It is Indian minds and Indian tongues that have since been engaged in killing his spirit"

மசானிக்கு மட்டுமல்ல , காந்தியை புரிந்து கண்டுணர்தல் இந்தியர்களின், ஒவ்வொரு மனிதனின் சுயவாழ்விற்குமான பெரும் அர்த்தமாகவே இருக்கும். காந்தியின் எளிமையான இசமற்ற இசம் சாதாரணமானதல்ல. ஒருவரிடம்

பெரும் மனப்போராட்டம், வைராக்கியம் , பற்றுறுதி , none is low none is high எனும் சிந்தனை இருந்தால் தான் சிறிய அளவாவது வசப்படும். தன்னை உணர வேண்டியதில்லை- பிறரைப் பற்றி மட்டும் எப்போதும் ஏதாவது கதைத்துக்கொண்டிருந்தால் போதும் என்பவர்களுக்கு காந்தி தேவைப்படாமல் போகலாம்.

காந்தி புறக்கணிப்பு indifference to Gandhi சுய அழிவிற்கான பாதையென்றே எனக்குத் தோன்றுகிறது . மன அழுகல் பிற எல்லா அழுகல்களையும் விடக்கொடுமையானது… that may be a great infection in any society

சோசலிசம் மறு ஆய்வு என்பதை 1944ல் மினு மசானி எழுதினார். என்னால் பதில்களைவிட பல கேள்விகளை உருவாக்க முடிந்துள்ளது. பதில்களை தேடுவது ஒவ்வொருவரின் முயற்சியாகட்டும் என பல கேள்விகளை மசானி அதில் அடுக்கினார்.

சர்ச்சிலுடன் அவ்வளவு விமர்சனங்களைக் கொண்ட ஸ்டாலினும் சர்ச்சிலும் கரம் கோர்த்ததை சொல்லிவிட்டு, சில முக்கியமான ஆக்கங்களை படிக்க அவர் வேண்டினார். Men and Politics by Louis Fischer, Stalin's Russia and the Crisis in socialism, Assignment in Utopia by Eugene Lyons, The Dream we lost by Freda Utley, Return from the USSR by Andre Gide போன்ற நூல்களை அவர் பரிந்துரைத்தார்.

மாக்ஸ் ஈஸ்ட்மேன் புரட்சிக்கு ஆதரவாக நின்றவர்- லெனின் டிராட்ஸ்கியை நட்புடன் பாவித்தவர். அவரை ஹரால்ட் நிக்கல்சன் போன்ற வலது மனிதர் விமர்சிப்பதும், ஸ்டாலினைக் கொண்டாடுவதும் வேடிக்கையாக இருப்பதாக அப்போது மசானி எழுதினார்.

1917ல் லெனினும் டிராட்ஸ்கியும் 'Peace Land and Bread' என வீரர்களுக்கான, விவசாயிகளுக்கான, தொழிலாளர்களுக்கான முழக்கத்தை புரட்சியின் போது முன்னெடுத்தனர். Free and equal society- classless, democratic and international socilaist society என்று பேசினர். Every cook must learn to run the State.. அதுவரையில்தான் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம். சொத்து படைத்த வர்க்க ஒழிப்பிற்கு பின் ஜனநாயகம் நிலவும் என்றார் லெனின். இறுதியில் அரசே உதிர்ந்துவிடும் என்கிற மார்க்சிய கருதுகோளையும் அவர் வைத்தார்.

1927ல் மாணவனாக மசானி சோவியத் சென்றபோது, நீக்ரோ ஒருவர் தன் கண்ணில் நீர்வழிய தான் இங்கு மட்டுமே மனிதனாக பார்க்கப்படுகிறேன் என்று சொன்னதைக் கேட்டு மசானி பரவசம் அடைந்தார். சிறிய தொழிற்கூடங்களில் கூட வேலை வழி டைரக்டர் இருந்தால், தொழிலாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'ரெட்' டைரக்டர் இருந்தார். அவரது ஒப்புதல் இல்லாமல் தொழிலாளர் விஷயங்களில் முடிவு வந்துவிட முடியாது. கல்வியில் ஏராள முன்னேற்றத்தை

ரஷ்யாவில் தான் பார்த்ததாக மசானி தெரிவித்தார். ஜான் டுவே கூட சோவியத் கல்வி சிறப்பைச் சொல்ல எனக்கு மொழி போதாது எனச் சொன்னார்.

மசானி மிக முக்கிய தோழர் காம்னேவின் துணைவியார், டிராட்ஸ்கியின் சகோதரியுடன் உரையாட வாய்ப்பைப் பெற்றார். புரட்சி பெண்களை பெருமளவு விடுவித்த பெருமிதத்தை அப்பெண்மணி மசானியிடம் பகிர்ந்துகொண்டார். திருமண- மணவிலக்கு சட்டங்கள் மிகச் சாதகமாக மாற்றப்பட்டதைக் குறிப்பிட்டார். 'சர்ச்சின்' ஆதிக்கமில்லை என்பதையும் தெரிவித்தார்.

1935ல் மசானி மாஸ்கோ சென்றபோது ஸ்டாலின் கட்டுப்பாட்டிற்குள் அரசு எந்திரம், கட்சி எந்திரம் எல்லாம் வந்துவிட்டன. டிராட்ஸ்கி உட்பட பலரின் இருப்பு இல்லாமல் செய்யப்பட்டிருந்தது. லெனின் படம் சிறிதாகி எங்கும் ஸ்டாலின் பெரும் உயரத்துடன் காணப்பட்டார். இரகசிய போலீசின் அடக்குமுறைகள் அதிகமாகியிருந்தன. ரெட் டைரக்டர்கள் முறை பாக்டரிகளில் இல்லை என்றனர். Stakhanovism- piece work முறை என ஒன்றை மசானி அப்போது பார்த்தாராம். பெண்கள் மணவிலக்கு பெறுவதில் சட்டக்கடுமை ஏற்பட்டதாம். கருக்கலைப்பு குற்றமெனச் சொல்லப்பட்டது. 11 குழந்தைகள் பெற்ற பெண்மணிக்கு ஊர் முழுக்க விளம்பரம் இருந்ததாம். கட்சியிலும் வெளியிலும் எதிர்ப்பு என்பதே ஸ்டாலினுக்கு இல்லாத சூழல் உருவாக்கப்பட்டது.

மசானியிடம் 1935ல் பேசிய தோழர்கள் டிராட்ஸ்கி புரட்சிக்கு எதிராகப் போய்விட்டார் எனச் சொல்லத்துவங்கினர். பிராவ்தா என்றால் உண்மை என்று பொருள். இஸ்வெஸ்டியா என்றால் நியூஸ் எனப் பொருளாம். இதைவைத்து வேடிக்கையாக ஒருவர் சொன்னாராம்

there is no news in the Pravda, and no truth in the Izvestia

மசானிக்கு தான் மிகவும் நம்பியிருந்த மத நம்பிக்கைப் போன்ற ஒன்று தகர்ந்து போவதாக உணர்ந்தாராம்.

1938ல் லண்டனில் இருந்த நேரு சோவியத் வர தனக்கு அனுமதி கேட்டாராம். காத்திருந்து அனுமதி கிட்டாமல் அவர் இந்தியா திரும்ப நேர்ந்தது. யூசுப் மெஹ்ரலி, எம் எல் டண்டவாலா, திருகும்தாஸ் போன்ற எவருக்கும் சோவியத் வர அனுமதி கிடைக்கவில்லை.

தொழிலாளர் சுரங்கத்தொழில் ஊதியத்தில் இடத்திற்கேற்ப , ஸ்டாகனாவொஸ்ட் என்றால் உயர் சம்பளம்- பிறர் என்றால் குறைவு என்ற வேறுபாடு இருந்ததாம். இவர்கள் ஒரே வேலைக்கு வெவ்வேறு சம்பளத்தை பெற்றனராம். 'அன்ஸ்கில்ட்' தொழிலாளியைவிட இன்ஜினியர் சம்பளம் 80 மடங்கு கூட இருந்ததாம். அப்போது பில்நாயக் என்ற எழுத்தாளர் ராயல்டியாக மாதம் 30 ஆயிரம் ரூபிள் பெற்றாராம். சுரங்கத் தொழிலாளி 400 ரூபிள் பெற்றாராம். அரசாங்கத்தில் 7 சத வட்டிக்கு ஊதியத்தை போட்டு அரசு பத்திரங்களைப்பெற்ற புதிய பணக்கார வட்டிக்கார குடும்பங்கள் வந்தனவாம்.

'எதல் மானின்' என்கிற எழுத்தாளப் பெண்மணி மால்டோவ் துணைவியாரை சந்திக்கப் போன போது அதிர்ச்சியும் ஆச்சர்யமும் அடைந்தாராம். வீட்டின் சொகுசு ஆடம்பரம், அங்கு வீட்டு வேலையாட்களின் பரிதாப நிலை- பன்றித்தொழுவ வேலையாட்கள் நிலை மோசமாக இருந்ததை அவர் சொல்கிறார்.

1943ல் சோவியத் ஏன் இருபாலர் சேர்ந்து பயிலும் கல்விமுறையை ஒழித்தது ஏன் என மசானி கேட்டிருப்பார். 1935க்கு பின்னர் சோவியத் குறித்து மசானி அறியத்துவங்கியதை அவர் கேலியாக இப்படிச் சொல்கிறார்.

Hitler must be defeated long live Hitler

ஹிட்லர் தோற்கடிக்கப்படவேண்டும் என முழங்கிவிட்டு அங்கு ஹிட்லரை உருவாக்கும் சூழல் குறித்த கேள்வியை மசானி எழுப்பினார்.

நாம் இப்போது வெளிப்ப்டையாக பேசிக்கொண்டிருக்கும் லெனின் வரிகளை 1944லேயே மசானி வெளிக்கொணர்ந்தார். அதை அன்றைய இடதுசாரிகள் நம்பாமல் கடந்து சென்றனர். மசானியின் அவ்வரிகள்

Lenin had in his last months, when he was ill and powerless, evidently sensed the danger that was to come. In his last Testament he described Stalin as rude, disloyal, capricious, nationalistic and spiteful- and recommended that he be removed from the general secretaryship of the Party. But it was too late"

சர்வதேசம் பேசிய சோவியத் ஸ்டாலின் தலைமையில் நேஷனலிசம் எனத் திரும்பும் என்றால் அது இம்பீரியலிசம் நோக்கியும் திரும்பாது என எப்படிச் சொல்லமுடியும் என்ற கேள்வியை 1944ல் மசானி எழுப்பினார்.

சோவியத் குடியரசுகளின் autonomy குறித்து டேவிஸ் என்பார் எழுதியதை மசானி சுட்டிக்காட்டினார்

These Socialist Republics are theoretically free to disassociate themselves from the Union. Such a liberty is academic. Kremlin - Stalin would not tolerate disunion"

சோவியத் தொழிலில், விவசாயத்தில், மக்களின் வாழ்க்கை தரத்தில் முன்னேற்றம் அடையவில்லை எனச் சொல்ல முடியாது என்பதை ஏற்ற மசானி, அதை சோசலிச நாடு என அழைக்கமுடியாது என்றார். அது வேறுவகை சோதனைதான் என்ற முடிவிற்கு வந்தார். It is neither classless nor democratic nor international என அவர் எழுதினார். சோவியத்தை பாசிஸ்ட் எனச் சொல்வதை மசானி ஏற்கவில்லை. அதை அரசு முதலாளித்துவம் என வரையறுத்தார். அமெரிக்கரான ஜேம்ஸ் பர்ன்ஹாம் அதை Managerial state என்றார். A managerial state is neither a capitalist nor a socialist state, but one with bureaucrats and managers run and hold power என்றார் அவர்.

சோசியல் டெமாக்ரசி பேசுகிறவர்களையும் மசானி விமர்சித்தார். அவர்கள் gradual-ness என்ற பெயரில் சோசலிசம் வராமல் பார்த்துக்கொள்கின்றனர் என்கிற கடுமையான விமர்சனத்தை மசானி வைத்தார். அவர்கள் ஒருவகையான trade union bureacracy உடன் செல்வதாகவும் விமர்சித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட்களை விமர்சிக்கும் போது அவர்களின் ’குவிட் இந்தியா’க்கால செயல்களை - நிலைப்பாட்டைச் சொல்கிறார்.

ஒரு நாட்டின் அறிவு வர்க்கம் மேற்கொள்ளும் அடிமைப் மனப்பாங்கே மிக ஆபத்தானது என மசானி கருதினார். சரியில்லை எனத் தெரிந்தால் விட்டொழிக்க அவர்கள் தயாராக இல்லை என்பதை அவர் விமர்சித்தார்.

நான்கு கேள்விகள் மார்க்சியம் சார்ந்த அம்சங்களில் விவாதிக்கப்படவேண்டும் எனக் கோரினார் மசானி.

தனியார் சொத்து ஒழிப்பு- தேசிய மயம் தானாக பொருளாதார ஜனநாயகத்தை கொடுத்துவிடுமா- கொணருமா? வர்க்கமற்ற சமுதாயத்தை தந்துவிடுமா?

மசானி தனது பதில் ஒன்றில்

Nationalisation of Industry unaccompanied by political democracy leads to a different form of exploitation.

அடுத்தக் கேள்வியாக சோசலிசத்திற்கு மாறிச் செல்லும் கட்டத்திற்கு பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்- ஒரே கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரம் என்பதுதான் வழிமுறையா? அப்படிப்பட்ட வழியில் அரசு உதிர்ந்து விடும் என்கிற நம்பிக்கை சரியா?

மாக்ஸ் ஈஸ்ட்மென் வேடிக்கையாக குறிப்பிட்டதை மசானி சுட்டிக்காட்டினார்.

Marx described as Utopian the conception that good men can bring about socialism. Stalinists actually believe that bad men can be relied upon to do so"

மூன்றாவதாக மசானி எழுப்பிய கேள்வி

can collective selfishness of the working class and its collective hatred for the property classes lead to socialism? can we build a superior society based on cooperation and love by appealing to selfishness and hatred?

டிராட்ஸ்கி பேசிய வர்க்கப் போராட்டம் என்பது law of all laws என்பது அறிவியல் பூர்வமானதா என்ற கேள்வியையும் இத்துடன் மசானி முன்வைத்தார்.

மசானி இக்கருத்துக்களை எழுதிய 1944ல் ஒருவர் சோசலிஸ்ட்டாக இருக்க வேண்டுமானால் இரண்டு விஷயங்களை குறைந்தது சொல்ல வேண்டும்.போராடவேண்டும் - Liberty and Collectivised economy என்று எழுதினார்.

பொருளாதார வாழ்க்கையில் சரியான பதிலை இந்தக் கேள்வியிலும் தேடலாம் என்றார் மசானி. அச்சமூகத்தில் மக்கள் அரசை own செய்யமுடிந்துள்ளதா அல்லது அரசு மக்களை own செய்துள்ளதா? என்பது அவர் வைத்த கேள்வி.

அடுத்து மசானி எழுப்பிய கேள்வி கம்யூனிஸ்ட்கள் பேசிய ends justify the means சரியா என்பதாக இருந்தது. மசானியைப் பொறுத்தவரை அப்போது அவர் காந்தியின் ஈர்ப்பிலிருந்து இவ்வரிகளை தந்துள்ளார். Socilism can only be achieved by clean means and with clean hands. without intellectual integrity and adherence to truth, we shall get lost in the woods

காந்தியம் என்பது முறையாக தொகுத்துச் சொல்லப்பட்ட தத்துவம் என்பதாக இல்லையென்றாலும் அகிம்சை வழி மக்கள் திரள் சத்தியாகிரகம் என்பது மதிப்புமிக்கது என மசானி இதில் குறிப்பிட்டுள்ளார். அது எதிரியின் உடலை அழித்து ஒழித்துவிடாமல் தன்னை வருத்தி அதன் மூலம் மாற்றம் ஏற்படுத்தும் பாதை எனவும் அவர் தன் புரிதலை தந்திருந்தார்.

ஜனநாயகம் என்பது முறை மட்டுமல்லாது அதுவே அனைவரின் பழக்கம் என்ற அளவிற்கு மாறவேண்டும். காந்தி சொல்வது போல் அகிம்சை வழியில் நிற்காத உலகில் ஜனநாயகமும் சோசலிசமும் சாத்தியமாக என மசானி தன் இந்த புத்தகத்தை முடித்திருப்பார்.

ஒரு வழக்கு மொழியுண்டு . எல்லா இசங்களும் வழக்கற்றுப் போகும்- All isms become wasms. அப்படி சோசலிசத்திற்கு நேர்ந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில்தான் தான் கேள்விகளையும் அதற்கான விடைகளையும் தேடுவதாக மசானி குறிப்பிட்டார்

மசானி 92 வயது வாழ்ந்து மே 27, 1998ல் மறைந்தார். 60 ஆண்டுகளுக்கு மேலான பொது வாழ்க்கை அனுபவங்களை நிரப்பிக்கொண்டு, மற்றவர்க்கும் ஓரளவு அதைக் கொடுத்துவிட்டு மறைந்தவர் மசானி.

லண்டன் படிப்பு, லேபர் கட்சி,மார்க்சியம், ஜனநாயக சோசலிசம், காங்கிரஸ் இயக்கம், காந்தி நேரு உறவுகள், ஜேபி -யூசுப்- பட்வர்தன் தோழமை, டாட்டாவுடன் உறவு , தொழிற்சாலை கன்சல்டண்ட் , ராஜாஜி- சுதந்திரா, ஜேபி- ஜனதா - சிவில் லிபர்டி என வாழ்வின் சோதனைகளை மசானி நடத்தி மறைந்தார்.

ராஜாஜியை தலைமைதாங்க அழைத்தவர் மசானிதான். சுதந்திரா துவங்கும் போது ராஜாஜிக்கு வயது 80. மசானி பொதுச் செயலராக இருந்து 12 ஆண்டுகள் ராஜாஜியுடன் சுதந்திராவை காங்கிரஸ் நேருவிற்கு மாற்றாக்கிட மசானி பாடுபட்டு தோற்றார்.

மசானி தனது ஆற்றலைப் பற்றி சரியான மதிப்பீட்டைக் கொண்டிருந்தார். மக்களுக்கு தலைமை தாங்கக்கூடிய வசீகரம் தன்னிடம் இல்லை என்பதை அவர் அறிந்திருந்தார். அப்படியிருப்பவர்களின் வேலைகளை பெருமளவு குறைத்து, அந்த அமைப்பின் theoretical as well as organisational மனிதராக பின் இருந்து வழிநடத்த தன்னால் முடியும் என்பதை நேர்த்தியாக சோதித்தவர் மசானி.

எவ்வளவு வசீகர மக்கள் செல்வாக்கு பெற்றவராக ஒருவர் இருந்தாலும், மசானிக்கு வேறுபாடு எனப்பட்டால், சுய இழப்பு குறித்து கவலை கொள்ளாமல் வெளிப்படையாகச் சொல்லிவிடுவார். அமைப்பில் தனக்கான முறிவு ஏற்பட்டாலும், வெளியிலிருந்து விவாத வெளியை, நட்பான உரையாடலை மேற்கொள்வார். ஜேபியுடன் அவர் விடாது அப்படிப்பட்ட நட்பை வைத்திருந்தார். மசானி தன்னைப்பற்றி

I was elected to be effective not popular என சரியான புரிதல் வைத்திருந்ததைக் காண்கிறோம்.

இந்திரா எதிர்ப்பில் கூட அதற்கான சரியான புரிதலை அவர் வற்புறுத்தினார். மசானி வெளிப்படுத்திய பார்வை இன்றுள்ள சூழலுக்கும் கூட பொருத்தமாக தோன்றுகிறது.

You cannot fight something with nothing. You have got to fight something with something better. I do not want to remove Smt Indira Gandhi until I can put in her place a better PM and a better government. I do not want to bring chaos at the centre..

1959-1970 களில் பட்ஜெட் என்றால் அதைக் குறித்து சரியான மதிப்பீடுகளுக்கு மசானியை அழையுங்கள் என்ற நிலை இருந்தது. பல chambers அவரை செவிமடுக்க தயாராக இருந்தனர். நேரு- மசானி இடையிலான விவாதம் நாடாளுமன்ற அரசியலுக்கு செறிவானவை என பார்க்கப்பட்டது.

அரசியல் அமைப்பு சட்ட அசெம்பிளியில், மசானி மைனாரிட்டி பிரிவைச் சார்ந்தவர் என்றாலும், ’யூனிபார்ம் சிவில் கோடின்’ அவசியத்திற்காக நின்றார். ராஜ்குமாரி கெளர், அம்பேத்கர், ஹன்சா, மசானி ஆகியோர் இதில் ஒன்றாக நின்று விவாதித்தனர். மதம் என்பதைக் காட்டி திருமணங்களுக்கு தடைக் கூடாது என்பதற்காகவும் மசானி, அம்பேத்கர் ஒன்றாக நின்றனர்.

மசானியின் மிக முக்கிய விவாதம் விகிதாச்சார பிரதிநிதித்துவ அரசியல்- அரசாங்கம் என்பதாக இருந்தது. பொதுவாக மசானியுடன் தோழமை பாராட்டிய படேல், இதில் கூடாது என்ற நிலைப்பாட்டை எடுத்தார். Proportional representation வந்துவிட்டால், reservation என்பது தேவைப்படாது என்ற மசானி நிலைப்பாடு எடுபடவில்லை. விகிதாச்சார பிரதிநிதித்துவம் உறுதியானால், இட ஒதுக்கீட்டை வற்புறுத்த தேவையில்லை என மசானியுடன் அம்பேத்கார் உடன்பட்டார் என்ற பதிவை எஸ் வி ராஜூ தருகிறார்.

ஸ்டாலின் மற்றும் சோவியத் குறித்து தனக்கு கிடைக்கும் செய்திகளை நேரு மற்றும் ஜேபியிடம் மசானி பகிர்ந்துகொண்டார். நேருவிற்கு மசானி செய்திகள் உண்மையாக இருக்காது என்ற கருத்து இருந்ததாம். ஜான் மதாய் விடுதலை இந்தியாவில் food Minister ஆக மசானி பெயர் லிஸ்டில் இருந்ததாகவும், மசானி நேரு- படேல் என்றால் எப்போதும் நேருவுடன் நிற்பாரா என்ற சந்தேகம் இருப்பதாகவும் கூறினார். மசானியோ அப்படியெல்லாம் முன்கூட்டியே எந்த உறுதிமொழியையும் தரமுடியாது. பல அம்சங்களில் நேருவுடன் நிற்க முடியும்,

சில அம்சங்களில் படேலுடன் நிற்க வேண்டியிருக்கும் என தெளிவுபடுத்தினாராம்.

புத்திக்கூர்மையும், எந்த ஓர் அமைப்பையும் முடுக்கிவிடும் ஆற்றலும்,விவாதத் திறனும் கொண்டிருந்தாலும், சரி எனப் பட்டமைக்காக நின்ற மசானியால் எங்கும் முழுமையாக தங்க முடியாமல் போனது. இப்படிப்பட்ட மனிதர்கள் சமூகத்தின் நினைவு கிடங்கில் கூட இல்லாமல் வெளியேற்றப்பட்டவராக வரலாற்றில் இருந்து போவதைக் காணமுடிகிறது.

மசானி எழுதிய Our India, We Indians, Socialism Reconsidered, CPI a short history, Swatantra Alternative , JP mission partly accomplished, Bliss was it in that Dawn, Against the Tide மூலம் தேடிப் போகிறவர்களுக்கு மசானி செய்தி சொல்லிக்கொண்டிருக்கிறார்.

உதவிய நூல்கள்

Minoo Masani by S V Raju

Socialism Reconsidered by Masani

ஆசிரியரின் பிற நூல்கள்

1. மார்க்சியத் தடங்கள்

2. ரோசாலக்ஸம்பர்க்

3. போராளிகளின் குரல்

4. பகவத்கீதை பன்முகக் குரல்கள்

5. Trade Justice in Telecom

6. Selected Ideas of O.P Gupta

7. ஹெகல் துவங்கி..

8. கார்க்கியின் அரசியல்வெளி

9. நவீன சிந்தனையின் இந்தியப் பன்முகங்கள்

10. காந்தியைக் கண்டுணர்தல்

11. நேருவின் மரபு

12. பெரியாரின் பொதுவுடைமை புரிதல்

13. அம்பேத்கரும் கம்யூனிசமும்

14. தோழர் காந்தி மகாத்மாவின் சோசலிச உரையாடல்

15. பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் (என் எளிய வாசிப்பில்)

16. லெனின் நான்கு கட்டுரைகள்

17. என் வாசிப்பில்…

சிறு வெளியீடுகள்

1. ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா
2. சிகாகோ மேதின தியாகிகள்
3. பகுனின் போராட்ட வாழ்வும் அனார்க்கிசமும்
4. விடுதலைக்கு முன்னர் எம் என் ராய்
5. பிரடரிக் எங்கெல்ஸ் நட்பின் சிகரம்
6. நேதாஜி சுபாஷ் – கம்யூனிஸ்ட்கள் உறவும் உரசலும்
7. காந்தியும் கம்யூனிசமும்
8. வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர்
9. வரலாற்றில் செளரி செளரா (நூற்றாண்டின் நினைவாக)
10. தோழர் டிராட்ஸ்கி சில இடுகைகள்
11. ஆச்சார்யா கிருபளானி

www.pattabiwrites.in